DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.418/2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW6 | Caste | : | |
| Name | : | ஆடிவேல் | Age | : | 50 |
| F/N | : | கந்தசாமி | Occupation | : | காவல் ஆய்வாளர் (காளையார்கோவில் காவல் நிலையம்) |
| Village | : | | | | |
| District | : | சிவகங்கை | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 29th day of April 2024.

**29.04.2024**
**(எதிரி ஆஜர்)**
**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.12.2022 ம் தேதி நான் கேணிக்கரை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 05.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு. தினேஷ்பாபு என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைபெற்று அங்கு சென்று கழுகூரணி போக்குவரத்து நகரை சேர்ந்த சுசீந்திரன் மனைவி சத்தியா என்பவரின் புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து காலை 06.00 மணிக்கு நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண்.705/2022, பிரிவுகள் 279, 337, 304 A இதச ஆக வழக்கு பதிவு செய்து புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கையின் அசலையும் சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் வழக்கு கோப்பை நான் எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு அதே தினம் காலை 07.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் கங்காகர்ணன் மற்றும் கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**2.** பின்பு சாட்சிகள் சத்யா, முகம்மது ஆசிப், ஜேசு எல்ஸ்டின், கார்த்திக், கங்காகர்ணன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு இராமநாதபுரம்

அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்று சவக்கிடங்கில் வைத்திருந்த இறந்துபோன ராணி என்பவரின் உடலை பார்வையிட்டு பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் இறந்த நபரின் உடலை பிரேத பரிசோதனைக்காக தலைமைக்காவலர் லதா என்பவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன்.

3. மேலும் அதே தினம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு. தினேஷ்பாபு என்பவரையும், தலைமைக்காவலர் லதா என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 22.12.2022 ம் தேதி 21.50 மணிக்கு கேணிக்கரை காவல் நிலையத்தில் வைத்து ஆஜர் எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் கடந்த 23.12.2022 ம் தேதி இவ்வழக்கில் சம்மந்தப்பபட்ட TN 65 AF 5083 என்ற பஜாஜ் ஆட்டோவை வாகன ஆய்வுக்காக மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 25.02.2023 ம் தேதி விபத்து பதிவேட்டை பதிவு செய்த மருத்துவர் சைலேஷ்பாபு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(விபத்து பதிவேடுகள் அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக முறையே குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் அதே தினம் இறந்த நபருக்கு பிரேத பரிசோதனை சான்று பெற்று சான்று வழங்கிய மருத்துவர் சக்திவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(பிண கூராய்வு அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனத்திற்கு வாகன ஆய்வு சான்று பெற்று சான்று வழங்கிய வட்டார போக்குவரத்து ஆய்வாளர் செந்தில்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் வழக்கு விசாரணையை முடித்து இவ்வழக்கின் எதிரி கந்தசாமி என்பவர் மீது சட்டப்பிரிவு 279, 337, 304 A இதச ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

குறுக்கு விசாரணை செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**